# சிந்தனை

பங்குனி
March
1



SINTHANAI

2/87

அன்பளிப்பு 5 DM



# ஒரு தோழியின் குரல்

புனிதை

தோழி
எழுந்து வா
இன்னும் என்னடி இருட்டினில் வேலை ?

மீண்டும் மீண்டும்
அடுப்படி தருசமாய்
அடிமை வாழ்வே தலை எழுத்தாக
எத்தனை நாள் தான் இந்த வாழ்வு ?

மானைக மருளாதே
அன்னம் போல் அசையாதே
வீறு கொண்டு எழு
எமது உரிமைகளை வென்றெடுப்போம்.

அன்று,
தலையை குனிவது அழகென்று சொல்லி
உலகையே பார்க்காமல் உன்னைத் தடுத்தனர்
உலகையே பார்க்காமல்
எத்தனை நாளதான் இந்த வாழ்வு
இன்றும் அப்படியா ?

உன்னைச் சுற்றி இடுகு வேலிகள்
இனியும் இருப்பதை அனுமதிக்காதே
இன்னும் என்னடி இருட்டினில் வேலை
தலையை நிமிர்த்து
எழுந்து வா ;
உலகைப் பார் !



நன்றி — சக்தி

# பெண் உரிமை



பெண் விடுதலை பற்றிப் பலராலும் பேசப்படுகின்றது, ஆனால் அது பற்றிய பூரணமான விளக்கமின்மையும் மக்கள் மனதில் பரவலாகக் காணப்படுகின்றது. நாம் பெண்களுக்கு குடும்பத்தில் உரிய இடம் கொடுத்திருக்கின்றோம். வாசற்படி தாண்டாது பாதுகாத்து வருகின்றோம், இனியும் அவர்களுக்கு என்ன வேண்டும் என்பது பலரின் வாதமாக இருந்து வருகின்றது. தங்களுக்கு விருப்பமான அணிமணிகளும் ஆபரணங்களும் கிடைத்து விட்டால் போதும், தாங்கள் சமயலுடன் இருந்துவிடலாம் என்பது பல பெண்களின் கருத்தாகவும் உள்ளது. பெண் விடுதலை என்பது சில வேலையற்ற பெண்களின் கோசம் என்று அவர்கள் நம்புகின்றனர்.

ஒரு அடிமை தான் அடிமையாக இருக்கின்றேன் என்பதை உணருவதே அவன் பாதி விடுதலையைப் பெற்று விட்டதிற்கு ஒப்பாகும். தாம் ஒடுக்கப்படுகின்றோம் என்ற உணர்வே இல்லாத பெண்கள் முழுமையான அடிமைத்தனத்தில் மூழ்கியிருக்கின்றார்கள் என்பதுதான் அர்த்தமாகும். பிறப்பிலிருந்து தந்தையின் கட்டுப்பாட்டிலும் பின்பு கணவன், அதன் பின்பு ஆண்பிள்ளைகளின் கட்டுப்பாட்டிலும் வாழ வேண்டியவள் பெண். கல்யாணம் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு வீட்டோடு இருக்கப்போகின்ற பெண்களுக்கு அதிகம் படிப்பு அவசியமில்லை, சமயல் வேலை மட்டும் அவர்களுக்குப் போதும் என்ற கொள்கை சமுதாயத்தில் ஆழமான ஊறியுள்ளது. சமூகத்தில் உள்ள பொருள் உற்பத்தி உறவுகளில் இருந்து அன்னியமானவளாகவே அவள் கருதப்படுகின்றாள். அவள் ஒரு அழகுப்பொருள். ஆண்களின் போகப்பொருள். அவளுக்குத்தேவையானவை எல்லாம் வெறும் போகப்பொருட்கள் தான் என்று நம்பவைத்திருக்கின்றது சமுதாயம். எதற்கும், எப்பொழுதும் அவர்கள் ஆண்களில் தங்கியிருக்க வேண்டியவர்கள்— சமுதாயத்தில் தமக்கென ஒரு தனியான அந்தஸ்தோ அன்றில் ஒரு பெயரோ இல்லாதவர்கள் பெண்கள். ஆணை மணமுடிக்காதவள் கன்னி. ஆணை மணமுடித்தவள் சுமங்கலி.

அந்த ஆணுக்கு அவள் குழந்தை பெற்றுக் கொடுக்காவிட்டால் மலடி. ஆண் அவளை விலக்கி வைத்துவிட்டால் வாழாவெட்டி. அவன் இறந்துவிட்டால் விதவை. இப்படி ஆண்களை முன்நிலைப்படுத்தாமல் பெண்களுக்கு தனியான ஒரு சமூக அந்தஸ்தோ அல்லது பெயரோ கிடையாது. இதற்கெல்லாம் காரணம் அவர்கள் உடல்ரீதியாகவும் உள்ளரீதியாகவும் தாழ்ந்தவர்கள் என்ற கொள்கைகள்தான். சமூக உற்பத்திக்கு அவசியமாகும் போது அவர்கள் பாவிக்கப் படுகின்றார்கள். ஆனால் அப்பொழுதும் அவர்களுக்கு சமசம்பளமோ அல்லது சமஅந்தஸ்தோ கொடுக்கப்படுவதில்லை. குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்கு அல்லது தமக்குத் தேவையான போகப் பொருட்களை வாங்குவதற்காகவே அவர்கள் வேலைக்கு செல்கின்றார்கள் என்பது பலரின் கருத்தாகும். தாமாகச் சிறு தொழில் செய்ய விரும்பும் பெண்கள் பல எதிர்ப்புகளை எதிர்நோக்குவதுடன் சமூகத்தில் தாழ்ந்த அந்தஸ்தை உள்ளவர்களாகவே கணிக்கப் படுகின்றனர். இவ்வாறு பெண்கள் சமூகத்தில் ஒடுக்கப்படுவதற்கான காரணம், அவர்கள் ஒவ்வொரு வீட்டினுள்ளும் ஒடுக்கப்படுவதேயாகும்.

இவ்வகையான ஒடுக்கு முறைகளில் இருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்பதே பெண்விடுதலையை வேண்டிநிற்பவர்களின் நோக்கமாகும். இந்தப் பெண் ஒடுக்கு முறையின் தோற்றுவாய்க்கான சரித்திர மற்றும் பொருளாதார ரீதியான அடிப்படைக் காரணங்களை இயங்கியல் முறையில் ஆய்வு செய்வதன் மூலமே இந்த நோக்கங்களை அடைவதற்கான மூலோபாயத்தை உருவாக்க முடியும்.

இரைதேடுதலிலேயே தமது முழுக்காலத்தையும் செலவளித்துக் கொண்டிருந்த ஆதிமனிதர்களின் சமூக வாழ்வில் ஒரு சிலர் மற்றவர்களைச் சுரண்டுவதற்கோ அல்லது ஒடுக்குவதற்கோ வேண்டிய பொருளாதார காரணிகள் தோன்றவில்லை. இயற்கையாகவே பெண்களுக்கமைந்த தாய்மையின் காரணமாக அவர்களுக்கான சில விசேடகுணம்சங்களும் வளர்ச்சியடையலாயின. பெண்கள் பெற்றெடுத்த குழந்தைகள் அவர்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டதாலும் உணவுக்காகவும் தாயை அண்டியே சிறு குழுக்களாக வாழ்ந்துவந்தனர். இக்குழுக்களுக்கு பெண்களே தலைமை வகித்தனர். இக்குழுக்கள் தாய்மார்கள், சகோதரிகள், சகோதரர்கள், பிள்ளைகள் அடங்கிய குழுக்களாகவே இருந்தன.

பல ஆதிவாசிகளின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்த அறிஞர்கள் இந்த தாய்த்தலைமைத்துவங்கொண்ட குழுக்கள் அமைந்த சமுதாய அமைப்பு முறைபற்றிப் பல உண்மைகளை ஆய்ந்து அறிந்துள்ளனர். பகுத்தறிவு கூட பூரணமான பரிணாமவளர்ச்சியடையாத காலத்தில் ஒரு குழுவிலுள்ள மனிதர்கள் மற்றைய குழுவிலுள்ள மனிதர்களையும் விலங்குகளையும் ஒரேகண்ணோட்டத்துடன் நோக்கியபடியால் மற்றைய மனிதர்களைக் கொன்று தின்னவும் அவர்கள் பின்நிற்கவில்லை. இவ்வாறு நரமாமிசம் உண்ணும் பழக்கம் ஆண்களிடமே இயற்கையாக நீடித்தது. பாலூட்டிகளாக இருந்த பெண்கள் பெரும்பாலும் தாவரபட்சணிகளாகவே இருந்தனர். நரமாமிசபட்சணிகளான ஆண்களிடமிருந்து பெண்கள் பிள்ளைகளைப் பாதுகாத்து வந்ததும் தாய்வழிக் குழுமுறைக்கு வழிவகுத்தது. மாமிசம் உண்ணும் ஆண்களும் தாவரபட்சணிகளான பெண்களும் ஒருமித்து உணவு உண்ணும் வழக்கம் பல ஆதிவாசிகள் மத்தியில் காணப்படவில்லை.

இந்த ஆதிவாசிக்குழுக்களிடம் காணப்பட்ட மற்றைய முக்கியமான பழக்கமானது, தாய்மார்கள், சகோதரிகள், சகோதரர்கள், பிள்ளைகள் அடங்கிய குழுக்களில் வாழ்ந்த ஆண்கள், அக்குழுக்களில் இருந்த பெண்களை மனைவியாகக் கொள்ளாமையேயாகும். ஒரு குழுவிலிருந்த ஆணுக்கு அவனுடைய தாயாரும் தாயின் சகோதர சகோதரிகளும் தாயாராகவே கணிக்கப்பட்டனர். மற்றவர்கள் சகோதர சகோதரிகளாகக் கருதப்பட்டனர். ஒரு ஆண் வேறு ஒரு குழுவிலிருக்கும் பெண்ணுடனேயே உறவு வைத்துக்கொள்ளகூடியதாக இருந்தது. இவ்வாறு உறவு வைத்துக்கொண்ட ஆண்கள் பெண்ணின் குழுவினருக்கு உணவு வகைகளையும் தானியங்களையும் பரிசாகக் கொடுக்கும் வழக்கம் ஆதிவாசிகள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது.

நெடுங்காலமாக இரையைத் தேடி வேட்டையாடி உண்டு வந்த மனிதர்கள், உணவைத் தாமே உற்பத்தி செய்ய ஆரம்பித்தமை மனிதசமூக வளர்ச்சிப் பாதையில் ஒரு பெரும் திருப்பு முனையாகும். இது சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்த வளர்ச்சி ஏற்பட்ட காலங்களிலிருந்தே நரமாமிசமுண்ணும் விலங்குத்தன்மைகளும் மனிதர்களிடம் சிறிது சிறிதாக மாறத்தொடங்கியது. பிள்ளைகளின் பசியைப்போக்க

கிழங்கு வகைகளுக்காக நிலத்தைக் கிண்டிய பெண்களே விவசாயத்தின் முன்னோடிகள் என்றும் கருதப்படுகின்றது. இவ்வாறு கிண்டப்பட்ட நிலங்களில் மேலும் கிழங்கு வகைகளும் தானியங்களும் வளர ஆரம்பித்தது. இதைத் தொடர்ந்து மந்தைகளை வளர்த்து அவற்றின் இறைச்சியையும் பாலையும் பாவிக்கும் முறைகளும் வளர்ச்சி அடைந்தன. இந்த மந்தைகளே மனிதர்களிடம் முதல் தோன்றிய உடமைகளாகும். இவை ஆரம்ப காலங்களில் குழுக்களின் பொதுச்சொத்துக்களாகவே அமைந்திருந்தது. மந்தை மேய்க்கும் இடங்களுக்கும் தண்ணீருக்கும் ஏற்பட்ட குழு மோதல்களின் போது சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் உபரி உழைப்பை மறு குழுவினர் அனுபவிக்க ஆரம்பித்தபோது மனிதனை மனிதன் சுரண்டும் முறையும் ஆரம்பமாகியது. இதுவே ஆண்டான் அடிமைகளைக் கொண்ட வர்க்க சமுதாயத்திற்கும் அடி கோலியது.

சமூக உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட இந்த பரிணாமவளர்ச்சியானது அவர்களின் பழக்க வழக்கங்களிலும் பல மாறுதல்களைக் கொண்டு வந்தது. வேறு குழுக்களில் இருந்த பெண்களுடன் உறவு கொண்டபோது கொடுக்கப்பட்ட உணவு வகைகளுக்கும் தானியங்களுக்கும் பதிலாக மந்தைகளைக் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டது. திருமணப் பரிசானது ஒரு பெண்ணுக்கும் அவள் பெறப்போகும் பிள்ளைகளுக்கும் கொடுக்கும் விலையாக பரிணாம மாற்றம் பெற்றது என்று கூறலாம். பெண் குழந்தைகள் பிறந்தவுடன் அவள் மூலமாக அதிகமான மந்தைகள் சேரப்போகின்றன என பெண்களைப் பெற்ற குழுவினர் சந்தோசப்பட்டனர். இந்த வழக்கத்தினால் பெண்ணின் பிள்ளைகள் மீது அவளின் குழுவினர்களுக்கு இருந்த உரிமைகள் பிள்ளைகளின் தந்தைக்கு கையளிக்கப்பட்டன. விலை கொடுத்து வாங்கப்பட்ட பெண் ஆணுக்குத் தேவையான பிள்ளைகளைப் பெற்றுக் கொடுக்காவிட்டால் பெண்ணைப் பெற்ற குழுவினர் மந்தைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் அல்லது வேறு ஒரு பெண்ணைக் கொடுக்க வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதிக மந்தைகளை வைத்திருந்த ஆண்கள் பல பெண்களை மனைவிகளாகப் பெறவும் அவர்களின் பிள்ளைகளினால் பலன்களைப் பெறவும் முடிந்தது. பிள்ளைகளைப் பெறுவதும் அவர்களையும் வயோதிபர்களையும் பராமரித்தலும் பெண்களின் வீட்டுக் கடமைகளாக்கப்பட்டன. ஆண் தலைமையிலான குடும்ப முறை படிப்படியாக உருவாகியது.

தனிச் சொத்துரிமையானது ஆண்தலைமையிலான குடும்பமுறைக்கும் பெண் ஒடுக்கு முறைக்கும் அஸ்திவாரமாக அமைந்தது. வர்க்க சமுதாயத்தின் படிப்படியான வளர்ச்சியில், ஆளும் வர்க்கங்களின் தேவைக்கமைய குடும்ப முறையும் வளர்ச்சியடையலாயிற்று. அடிமை மற்றும் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்புகளில் தனிச்சொத்துரிமை பாதுகாக்கப்படுவதற்கு உதவிய ஆணாதிக்க குடும்பமுறையானது இன்று முதலாளித்துவ சமுதாய அமைப்பிலும் பெரும் பங்கு வகிக்கின்றது. மனித உணர்வுகளுக்குத் தேவையான அன்பு, ஆதரவு, பாதுகாப்பு போன்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இந்தக் குடும்பமுறை உதவுகின்ற போதிலும் தனிச்சொத்துரிமையைக் கட்டிக்காக்கும் முயற்சியில் அந்த உணர்வுகளையும் சீரழித்து விடுகின்றது. இன்றைய முதலாளித்துவ அமைப்பு முறையின் அடிப்படை அலகாக குடும்பமுறை அமைந்துள்ளது. ஆளும் வர்க்கங்களின் தேவைகளையும் நலன்களையும் பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுக்

தனிச்சொத்துரிமை ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கு பாதுகாப்பாக கைமாற்றப்படுவதன் மூலமே தனியுடமைச்சமுதாய அமைப்பைக் கட்டுக்குலையாமல் பாதுகாக்க முடியும். குடும்பமுறை இந்த முக்கிய கடமையை செய்கின்றபடியால் தனியுடமைச் சமுதாயத்தின் ஆணிவேராக அமைந்துள்ளது.

உற்பத்தி சாதனங்களை சொந்தமாக வைத்திருக்கும் ஆளும் வர்க்கங்களுக்கு அவசியமான தொழிற்சக்தியை விற்பனை செய்யக் கூடிய உழைப்பாளிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களைப் பராமரித்து வளர்ப்பதற்கும், வேலையில் இருந்து திரும்பும் தொழிலாளர்களையும், வயோதிபர்களையும் கவனித்துக் கொள்வதற்கும் பெண் அடிமை முறையை அடிப்படையாகக் கொண்ட குடும்பமுறை அவசியமாகின்றது. இப்படியாக பெண் குடும்பத்தில் இருந்து கொண்டு ஆளும் வர்க்கத்தினரின் இலாபத்திற்காக செய்யப்படும் உற்பத்திக்கு செய்யும் சேவைக்கு எவரும் அவளுக்கு ஊதியம் கொடுப்பதில்லை. ஆளும் வர்க்கங்களுக்கு அவசியமான பழக்கவழக்கங்களையும், பழமை பிடிப்பையும் சித்தாந்தங்களையும் தொட்டிலில் இருந்து சுடுகாடு வரை கடைப்பிடிப்பதற்கு குடும்பத்திலேயே பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்த குடும்ப முறைக்கு பங்கம் ஏற்பட்டால் வர்க்கசமுதாயத்தின் அடிப்படையான தனியுடமைக்கும் பங்கம் ஏற்படக்கூடும் என ஆளும் வர்க்கங்கள் கருதுகின்றன. இதனால் ஆளும்வர்க்கங்களுடைய

சட்டங்கள், கோடுகள், பொலிஸ், சமயசம்பிரதாயங்கள் எல்லாம் பெண் அடிமை முறையை அடிப்படையாகக் கொண்ட குடும்ப முறையை கட்டிக்காக்க முயலுகின்றது.

பெண்ணுக்கு உரிய இடம் வீடு. இல்லத்தில் இருப்பவள் இல்லாள். மனையை பராமரிப்பவள் மனைவி என்று இலக்கணங்கள் கூறும் ஆளும் வர்க்கங்கள், தமது இலாபத்தைப்பெருக்கும் அவசியம் ஏற்படும் பொழுது அவர்களை வெளியில் கொண்டு வருவதற்கு பின் நிற்பதில்லை. முதலாளித்துவத்திற்கு அதிகமான உழைப்பாளிகள் தேவை ஏற்படும் போது குறைந்த கூலியில் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அவர்கள் தொழிலாளர்கள் என்ற முறையிலும் பெண்கள் என்ற முறையிலும் சுரண்டப்படுகின்றார்கள். அவர்களின் உழைப்பு தேவையற்றதாகும் பொழுது வீட்டிற்கு அனுப்பப்படுகின்றார்கள். பெண்களின் முறையான இடம் வீடுதான் என்ற மனோபாவம் பலர் மனதில் இருப்பதால் சமூகத்தில்இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதில்லை.

முதலாளித்துவவர்க்கம் தனது அதீத சுரண்டலுக்குகாக பெண்களை வேலைக்கமர்த்தும் பொழுது பல உள்முரண்பாடுகளை எதிர் நோக்குகின்றது. வீட்டில் முடங்கியிருக்கும் பெண்கள் வேலைக்கு வருவதால் மற்றைய பெண்களை சந்திப்பதற்கும், தொழிற்சங்கம் போன்ற அமைப்புகளில் இணைந்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் வழிபிறக்கின்றது. தமது தேவைகளுக்காக பிறரில் தங்கி இருக்கும் பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைவதால் பெண்களுக்கு எதிராக நடைபெறும் மற்றைய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். முதலாளித்துவம் பெண்களை விற்பனைப்பொருட்களாகவும், விளம்பரங்களாகவும், போகப்பொருட்களாகவும் ஆக்குவதை எதிர்க்கின்றார்கள். பெண்களைப் பாதிக்கும் பிள்ளைப்பேறு, கருத்தடை போன்ற விடயங்களை ஆளும்வர்க்கங்களின் சட்டங்களும் ஆண்களும் அல்ல, பெண்களே தீர்மானிக்கும் உரிமைவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றார்கள். குடும்பமானது அன்பு, ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையிலே அமைய வேண்டுமேயன்றி தனிசொத்துரிமையை பாதுகாக்கும் நோக்கத்துடன் அமையக்கூடாது என வற்புறுத்துகின்றனர்.


பெண்கள் வேலைக்குச்செல்லும் பொழுது அவர்களின் குழந்தைகளைப் பராமரிக்கவும் கல்வி கற்பிக்கவும் அரச செலவில் ஸ்தாபனங்கள்

அமைக்கப்படுகின்றன. வயோதிபர்கள் வைத்திய வசதிகளுடன் பராமரிக்கப்படுகின்றனர். பொதுச்சமையல் கூடங்கள் சகலருக்கும் தேவையான உணவுகளைத் தயாரிக்கின்றன. இவை எல்லாம் பெண்களின் கடமைகள் வீட்டில் தான் என்பதை பொய்ப்பித்து விடுகின்றன. இவை முதலாளித்துவத்தின் ஆணிவேரையே ஆட்டிவிடும் போல அமைகின்றது. இந்த உள்முரன்பாட்டின் தாக்கத்தினால் முதலாளித்துவ வர்க்கம் சமய ஆச்சாரிகளினதும் பழமை வாதிகளினதும் துணையுடன் பெண்களை மீண்டும் வீட்டிற்கு அனுப்பி அடுப்பங்கரைகளில் முடக்க முயற்சி செய்கின்றது. இன்று அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இதை நாம் வெளிப்படையாகக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் பெண்களின் உரிமைப் போராட்டமானது தனிச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான போராட்டத்தின் ஒரு அம்சமாகவே விளங்குகின்றது. ஆனால் இதைக் காரணம் காட்டி, பொதுவுடமைப்புரட்சிக்கான போராட்டமே அவசியம், பெண்களின் உரிமைக்கான தனியான இயக்கமோ அல்லது போராட்டமோ அவசியமில்லை எனக் கூறுவது தவறாகும். இது பொதுவுடமைப்புரட்சியினால் தேசிய இனப்பிரச்சனைகள் தீர்ந்து விடும் ஆகையினால் தேசிய விடுதலைப் போராட்டங்கள் அவசியமில்லை என்று சொல்வதற்கு ஒப்பாகும்.

இன்றைய வர்க்க சமுதாயமானது அதன் வளர்ச்சிப்போக்கில் உருவாக்கிய சீரழிவுகளில் பெண் ஒடுக்கு முறையும் ஒன்றாகும். தனிச்சொத்துரிமை அகற்றப்பட்ட வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதன் மூலமே பெண்கள் பூரண உரிமையுடன் வாழ முடியும். இந்தத் தொலை நோக்குடன், பெண்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை உள்ளடக்கிய மூலோபாயத்துடன் பெண் உரிமைப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

—பராசக்தி.





# விடிவெள்ளியொன்று பிறந்துவிடும்!

— ஜோதி நவரத்தினம்

தூரத்து மேகங்கள்
துயரத்தைச் சுமந்துவரும் நேரம் -
பாரத்தைப் பகிர்ந்தெடுத்து
பங்கு கொள்ள எண்ணுகின்ற காலம் -
ஓரத்தில் பெண்ணென்று
ஒதுங்கி நின்றால் பாவம் -
உணர்த்திடுவோம் உண்மையினை
உயர்த்திடுவோம் பெண்மையினை.

முன்னவர்கள் சொன்னார்கள் என்பதாலோ
முதியவர்கள் சொல்கின்றார் என நினைந்தோ
சொன்னவர்கள் சொல்வதெலாம் கேட்டு நாமும்
பின்னடைதல் விட்டொழிவோம்.
பரிணாம விதிகளினைப் புரியாத பாமரர்கள்
திரித்துணர்த்தும் கருத்துக்கள்
தேவையில்லை நமக்கிங்கு.

எலும்போடு தொடங்கி ஏவுகணை வரையுயர்ந்த
நெடுங்கால நாகரீகம் நமக்குரைப்பது அஃதுமில்லை.
சீர்பெற்ற சிந்தனை சிறப்புற்ற செயலாற்றல்
யார் பெற்ற போதுமது யாதுக்கும் மேலன்றோ.

சிந்திப்போம் செயற்படுவோம்
நிந்தனைகள் எதுவரினும் நிமிர்ந்து செல்வோம்
கலாச்சாரம் பண்பென்று காரணங்கள்.
கணக்கின்றிப் பலகூறி ஓயாது
கரிக்கோட்டில் பெண்மையினை சிறைவைக்கும்
நிலைமாற்றம் உறல் வேண்டும்
பெண்களெலாம் தலைநிமிர்ந்து
தமதுரிமை கேட்க வேண்டும்-

பாவை படித்துப் பனிக்குளிரில்
கோயில் குளமெல்லாம் போயலைந்து
சேயிழையாள் வரம் கேட்பாள்
கடவுளிடம்.
பின்னொரு நாள் முன்னறியா
முகம் கண்டு
பன்னெடு நாள் கேட்டவரம்
பலித்ததென்று
அன்னையரும் தந்தையரும்
சொலக் கேட்டு
அக மகிழ்ந்து மணம் முடிப்பாள்.
பின்னர்,
கல்லென்று உணர்ந்திருந்தால்
உணர்வில்லாக் கணவனென்று பொறுத்திருப்பாள்.
புல்லென்று உணர்ந்திருந்தால்
போகட்டும் புருசனென்று வாழ்ந்திருப்பாள்.
கரடி என்றும் புலியென்றும்
கண்ட பின்னே பாவம்,
பாவையவள் சாவையன்றி
வேறதனைத் தேர்ந்தெடுப்பாள்.

கட்டவிழ்த்துத் தப்பிவிட்ட எண்ணிலோ
பட்டியிலே விட்டகன்று போனதென்று

பாவமிவள் நாமமுமே மாறிவிடும்
முகைத்த மானிடத்தின்
முளையரும்பு போலிவர்கள்
சிதைந்த பண்பாட்டுத்
தீயினிலே கருகியதை
திகைத்து நினைக்கையிலே
தீந்தனல்கள் விழியில் வரும்.

அடுப்பினிலே ஆசைகளை
அடுக்கி எரித்தெரித்து
துடுப்பிழந்து போனகதை போதும்.
பகட்டுடையோர் படைத்த
பாதி வெந்த நீதியிலே
புகட்டினிலே நொந்து செத்தாள்...
போதுமினிப் போதும் போதும்.
வரட்டு நியாயங்கள்
வழக்கொழிந்து போகாமல்
முரட்டுக் கயிறுகளால்
மூக்கில் கடிவாளமிட்டார்
முடிந்த கதை தொடராமல்
தொடங்கிப் பல நாட்கள்
முடங்கிச் சீரழியும்
தொழு நோயைத்துரத்திடுவோம்.
துயரமெலாம் அகற்றிடுவோம்.

சித்திரங்கள் ஓவியங்கள்
சினிமா - கதை - கவிதை இலக்கியங்கள்
அத்தனையும் ஆற்றாது அகம் வெதும்பி
எத்தனையோ வழியினிலே எடுத்துரைத்தும்
சித்தமிலார் நம்மிடையே சிலர் இருந்து
நித்தம் ஒரு கதை சொல்லி நீதியினைப்

பித்தலாட்டம் செய்கின்றார் பெண்மையினை
எத்தியுதைக்கின்றார் இனியும் வேண்டாம்.
புத்தியிலாதவரை யெல்லாம் புறக்கணிப்போம்.
புரையோடும் சமூகத்தைப் புனரமைப்போம்.
சீதனத்தை சீர்திருத்தம் வேண்டுமென்ற காரணத்தை
வேதனையால் பெண்ணுலகம் வேகின்ற பாதகத்தை
நொந்து கலை படைத்து நோகாமல் புகழ்படைத்தோர்
அந்தப் புகழ்விற்றே ஆயிரமாய் சீர் கேட்டார்.
சத்தியமாய் நானையுமிந்த நிலைமையுண்டென்றால்
நித்தியமாய் அழிந்திடுவீர் நீவிர் இவ்வுலகின்றி.

பெருமை பெறு காவியங்கள்
எவையெனினும் பெண்மையினைச்
சிறுமையுற விளக்குமெனில்
சீற்றம் கொள்வோம்.
உறுமிவரும் வேங்கையைப் போல்
பெண்ணைக் கண்டு
சிறுமையுற்று ஒதுங்கச் செய்வோம்
மடமைதனை பொறுமையுற்று
அகற்றிடுவோம் கடமையென்று.

நூற்றாண்டு பலதோற்றுப் போய்விட்ட துயரங்கள்
நேற்றோடு போனதென்று நிம்மதியாய் வாழ்வதற்கு
மாற்றுவழி இன்று கண்டோம் மனதில் இனித்
தேற்றமுற்று தொடர்ந்திடுவோம் தீமைகளை ஒழிப்பதற்கு

கண்களிலும் இரண்டினில் தான்
காட்சி தெளிவாகும் என்போம்.
எண்ணையூற்றி இயக்கிவிட்ட இயந்திரமாய்
பெண்மையினைக் கருதல் செய்யோம்.
புவியியலில் வானியலில்
உயிரியலில் பொறியியலில்

உலகிலுள்ள அனைத்திலுமே
வலிமையுற்ற மேற்குலகம்
உரைக்கின்ற உண்மையிது.
அறிவியலில் ஆணென்றும் பெண்ணென்றும் பேதமில்லை,
அடக்க எண்ணல் பெண்களினை ஆக்கத்தின் பாதையில்லை.

கீதையென்று சில நாட்கள் படித்துவிட்டு
கிறுக்கல் என்று ஒதுக்குகின்ற போலிநிலை,
வீணையென்று சிலகாலம் சுவைத்துவிட்டு
விறகென்று வீசுகின்ற கேலிநிலை.
கற்பூரம் தனையள்ளிக் கனலிவிட்டு
களி மண்ணுள் புதைக்கின்றநாசநிலை.
அனைத்துமினி ஆவதில்லைச் சூளுரைப்போம்
அடிமை நிலை நமக்குளில்லை அறைந்து சொல்வோம்.

அடிவானைக் கீறியந்த ஆதவனைப் பெயர்த்தெடுத்து
அறியாமை இருளோடு இழுத்துச் செல்வோம்
நெடிதான பாதையென்று நின்று பார்த்தால்
நேரமெலாம் ஓடிவிடும் நீதியெலாம் துஞ்சிவிடும்.

தீர்ந்து விடவில்லைச் சினமின்னும் விழிகளிலே
ஓய்ந்துவிடவில்லை அநீதி நமக்கிங்கே
சேர்த்து வைத்த சினமெல்லாம் ஒன்றுகூட்டி
சூழ்ந்து நின்று சூளுரைப்போம்.

எமதுணர்வு எமதுரிமை, எமதெழுச்சி
ஒடுக்க வரும் எஃதெனினும்
எரிமலையாய் பொசுக்கிடுவோம்
விடிவொன்று பிறந்து விடும்
வேதனைகள் பறந்து விடும்.

**நன்றி**

# பெட்டகத்திற்குள்ளே.....

மனிதன் மனிதனைச் சுரண்ட ஆரம்பித்த காலம் தொட்டு, இன்னும் நம் சமுதாயத்தில் 'பெண் அடிமை' கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கின்றது.. இன்று விஞ்ஞான முன்னேற்றத்துடன் சமூகம் முன்னேறிவரும் காலத்திலும் கூட எமது மக்களின் சிந்தனைகள் பெண் சுதந்திரத்தைப் பொறுத்த மட்டில் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே ஓடிக்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு தனிமனிதருக்கும், பெண்கள் உட்பட, பல விதமான ஜனநாயகசுதந்திரங்கள் உண்டு என கூறப்படுகின்றது. ஆனால் எங்கள் பெண்கள் அந்தச் சுதந்திரங்களைப் பத்திரமாகப் பெட்டகத்தினுள் பூட்டி வைத்திருக்கின்றார்கள் போல இருக்கின்றது. அதே நேரத்தில் இந்த உரிமைகளை உரித்தாக்கிக் கொள்ள நினைக்கும் சில பெண்களின் முயற்சிகள் ஆண்மேலாதிக்க சமூகத்தினால் முற்றாகவே மழுங்கடிக்கப்பட்டுவிடுகின்றது. ஆண்மேலாதிக்கம் ஊறியுள்ளவர்கள், ஒரு பெண் எங்கே ஆணைவிட பதவிகளில் உயர்ந்து விடுவாளோ என்று அஞ்சி, அவளை தம் பசப்பு வார்த்தைகளினால் மயக்கி அவளின் உயர்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றார்கள். திருமணவாழ்க்கையுடன் அவள் அடுப்பங்கரையை நாட வேண்டியதுதான்.

பெண்கள், ஆண்களுக்கு மட்டும்தான் கொள்கைகளும் நோக்கங்களும் இருக்கவேண்டும் என்று நம்புவது தப்பாகும். ஒவ்வொரு பெண்ணுக்கும் சுதந்திரமான நோக்கங்களும் கொள்கைகளும் இருக்க வேண்டியது அவசியமாகும். பல ஆண்கள் தங்களினால்தான் எதையும் செய்யமுடியும், பெண்கள் வீட்டு வேலைகளையும் பிள்ளைகளையும் கவனித்துக் கொண்டிருந்தால் போதும் என எண்ணுகின்றார்கள். நமது சந்ததி பெருகுவதில் குடும்பம் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் அந்தக் குடும்பத்தைச் சிறப்பாக்க முடியும். ஒவ்வொரு குடும்பப் பிரச்சனையிலும் இருவருக்கும் சமபங்கு உண்டு. ஆனால் நம் பெண்கள், விஞ்ஞானமும் நகரீகமும் வளர்ந்து விட்ட இந்தக் காலத்தில் கூட தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டு வாழ்கின்றார்கள். இதற்கு ஆண்கள் தூண்டு கோலாக இருக்கின்றார்கள்.

இன்று, எமது சமுதாயத்தில் உள்ள யதார்த்த சூழ்நிலைகளின்படி ஒரு பெண்ணை வளரும் சமுதாயத்திற்கு ஏற்றவளாக மாற்றுவது ஆண்களின் கைகளில்தான் இருக்கின்றது. இது ஆண்களின் பொறுப்பும்கூட. ஏனென்றால் நாளை ஆணின் உதவியும் ஆதரவும் ஒரு பெண்ணுக்கு இல்லாமல் போனால் கூட அவள் சமூகத்தில் உயர்ந்து வாழ்வதற்கு வழி செய்யப்பட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு ஆணும் நினைத்திருந்தால் எம் பெண்கள் இவ்வளவு கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள். பெண்களும் தாம் பெட்டகத்தினுள் பூட்டி வைத்திருக்கும் சுதந்திரங்களை பாவிக்கவும் வேண்டும். பெண்கள் தாங்கள் சுதந்திரமாக வாழத் தகுதி உள்ளவர்கள். தாம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று எண்ணுவதே பாதிச் சுதந்திரத்தைப் பெற்றதற்குச் சமனாகும். இந்த உணர்வை பெண்களுக்கு ஏற்படுத்துவதே பெண் விடுதலையில் அக்கறை கொண்டவர்களின் கடமையாகும்.

— மயூரி.



# பெண்களே சற்று சிந்தியுங்கள்

பெண்கள் தம்மைப்பற்றிச் சிந்திப்பதையே மறந்து விட்டார்கள். அதுவும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் உள்ள பெண்கள் தம்மைப்பற்றிச் சிந்திப்பதே இல்லை. சதா தம் கணவன், குழந்தைகள், தமது கடமைகள் -இதுதான் அவர்களின் வாழ்க்கையாகி விட்டது. இதற்கு அவர்களில் பிழை கூறவும் முடியாது. ஏனெனில் சமுதாயத்திலும் ஆண்வர்க்கத்தினராலும் அவள் அவ்வளவு பின் தள்ளப்பட்டுள்ளாள். பெண்களே நீங்கள் துணிந்துவிட்டீர்களானால் இந்தப்போலி சமுதாயமும் ஆண்வர்க்கமும் அடங்கிவிடும். சற்று உங்களைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் எவ்வளவு அடிமைகளாக, கிணற்றுத்தவளைகளாக, உலக அறிவு வளர்ச்சியின்றி உள்ளீர்கள் என்பது உங்களுக்கே விளங்கும்.

பல நாடுகளில் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளார்கள். பெண்கள் இல்லாமல் போராட்டங்கள் வெற்றிபெறுவது கடினம் என்பதை ஆண்கள் ஒத்துக்கொள்ள வைத்துள்ளார்கள். ஆனால் இத்திறமை எல்லா நாட்டுப் பெண்களுக்கும் வரவேண்டும். பெண்கள் விடுதலை பெற வேண்டுமானால் ஓரளவாவது அரசியலில் ஈடுபட வேண்டும். அதுதான் அவள் அடிமை நிலையில் இருந்து மீள உதவியாக இருக்கும்.

இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் பெண்களே பெண்களை அடிமைப்படுத்தும் அளவுக்கு ஆண்வர்க்கம் அவர்களை ஆட்டிவைக்கின்றது.

சீதனக்கொடுமை.

இதனால் எத்தனை தற்கொலைகள், உயிருடன் எரியும் கொடுமைகள், ஏற்படுகின்றன. மாமி மருமகள் சண்டைகள்— இவற்றை நினைத்தாலே பெண்ணினத்திற்கு அவமானம்.


வேலைக்குச் செல்லும் பெண்களின் வாழ்க்கையும் சுலபமானது அல்ல. காலை எழுந்து வீட்டு வேலைகளை முடித்து விட்டு வேலைக்குச் சென்று அங்கும் தம் சக்தியை செலவழித்துவிட்டு வீட்டிற்கு வந்து அவர்கள் ஓய்வெடுப்பதில்லை. அவர்களுக்காக வீட்டு வேலைகள் காத்திருக்கும். இதை ஆண்கள் சிந்திப்பதில்லை.

பெண்களின் கடமைகளில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டால் ஏச்சு பேச்சு, அடி, உதை எல்லாம்வாங்கவேண்டியிருக்கும். இதுதான் அவர்கள் உழைப்புக்குப் பெறும் கூலி.

பெண்கள் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை யாரோ ஒருவருக்கு கீழ்ப்படிந்தே வாழப் பணிக்கப்பட்டுள்ளாள். பிறந்ததும் பெற்றோருக்கும் பின் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் கீழ்ப்படிந்தே அவள் வாழ வேண்டும்.

பெண்கள் தங்கள் அடிமைத்தளைகளை உடைக்க துணிவு கொள்ளவேண்டும். பெண்கள் துணிந்து விட்டால் அவர்களை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

— ரஞ்சனி.



# ஈழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு

ஒடுக்கும் சிறீலங்கா அரசுக்கெதிராக ஒடுக்கப்படும் ஈழ மக்கள் தமது உயிர்ப் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கோரி, தமது விழுமியங்களை காத்துக்கொள்ள, தமது பாரம்பரிய வரையறுக்கப்பட்ட – பிரதேசத்தை தமதாக்கிக் கொள்ள, ஒடுக்குமுறை வன்முறை வடிவில் அமைவதால் அதே வன்முறையினூடாகவே தமது தேசத்தை விடுவித்துக்கொள்ள நடத்தும் விடுதலைப் போராட்டமே ஈழவிடுதலைப் போராட்டமாகும்.

இதன் பிரதான அம்சங்களாக கருதப்படவேண்டியவை யாதெனில், எந்த தேசம் விடுவிக்கப்பட வேண்டியதோ அந்தத் தேசத்தின் அனைத்துக் குடிமக்களும் சம்பந்தப்படும் போராட்டம் இதுவாகும் இதனால் இம்மொத்த மக்கள் தொகையின் வர்க்க இருப்புகள் கவனத்தில் கொள்ளத் தக்கவை.

அத்துடன் இவ் விடுதலைப் போராட்டத்தின் தலைமை சக்தி ஆனது தனியொரு வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலிப்பதாக அல்லாமல் மொத்த மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் விடுதலை இயக்கமாக இருத்தல் வேண்டும் என்பது முன் நிபந்தனையாகும்.

மேலும் சமகால விடுதலைப் போராட்டங்கள் வெறுமனே தேச விடுதலை என்பதோடு மட்டுமல்லாமல், அதன் பின்னரும் சோசலிசத்தின் திசைவழி நோக்கிச் செல்வது உண்மையே. எனினும் இதில் செல்வாக்குச் செலுத்தும் புறக்காரணிகளும், நிர்ப்பந்தங்களும், சுயசார்பற்ற நிலைமைகளும் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

எப்படியிருப்பினும், தொலை நோக்குகள் எவையாக இருப்பினும், பாட்டாளி வர்க்க கட்சியாக தன்னைப் பகிரங்கப்படுத்திக் கொண்டு ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்குவது, குறிப்பாக ஈழத்தின் யதார்த்தத்தில் இது சாத்தியமற்றது.

இந்தப் பின்னணியிலேயே பெண்விடுதலையை எவ்வாறு ஈழப்போராட்டம் கையாளும்; அத்துடன் பெண்விடுதலை சக்திகள் எவ்வாறு ஈழப்போராட்டத்தைக் கையாள்வது என்பது போன்ற கொள்கைகளை நாம் வரையறுத்துக் கொள்ள முடியும்.

மேலும் ஈழப் போராட்டத்தில் பெண்களின் பங்கு புறக்கணிக்க முடியாத அளவு காத்திரமானதாய் அமைந்துள்ளது.

1961 இல் சத்தியாக்கிரகத்தில் பெண்களின் பங்களிப்பு இருந்தது. தமிழரசுக் கட்சியின் மாதர் முன்னணியில் பிலோமினு லோறன்ஸ் (திருமலை), மங்கையற்கரசி (யாழ்ப்பாணம்), மாணிக்கம் கலா (மட்டுநகர்) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் என்ன காரணத்திற்காக, அரசியலில் பங்குபற்றினர்; தற்போது என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்பதை விடுத்து அந்தக் காலகட்டத்தில் பெண்கள் அரசியலின் பக்கம் பார்த்ததை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1970 களில் தமிழ் மாணவர் பேரவையினுல் நடத்தப்பட்ட ஊர்வலங்களில் பெருமளவு மாணவிகள் கலந்து கொண்ட போதும் பெண்களுக்கான அமைப்பு இருக்கவில்லை.

1973 களில் தமிழ் இளைஞர் பேரவையில் பெண்கள் தீர்மானகரமான இடத்தில் இருக்கவில்லையாயினும் பெண்களை அணி திரட்டுவதில் முற்பட்டது. அத்துடன் தமிழ் இளைஞர் பேரவையால் 1974 இல் சிறிமாவோ யாழ்நகர் வருவதை எதிர்த்து நடத்தப்பட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்ட 3,000 பேரில் 400 பேரளவில் பெண்கள் கலந்துகொண்டனர். எனினும் இவர்கள் தொடர்ந்தும் செயற்படவில்லை.

1975 இல் சிவகுமாரன் இறந்தபோது இவரது மரண ஊர்வலத்திலும் பெருமளவு பெண்கள் கலந்துகொண்டதுடன் சுடலைக்கும் பெண்கள் சென்றனர். இக்காலகட்டத்தில் பெண்களும் அரசியலில் ஈடுபடுவது என்பது மக்கள் மத்தியில் ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தியது.

1975 இல் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தமிழ் இளைஞர் பேரவையுடன் தொடர்புற்றிருந்த பெண்கள் பலர் சுமார் 40 பேரளவில் காங்கேசன்துறையிலேயே தங்கியிருந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

பெண்களின் அரசியல் ஈடுபாட்டை கண்ணுற்ற திருமதி மங்கையற்கரசி, அமிர்தலிங்கம் தமிழ் மகளிர் பேரவையை உருவாக்கினர் இது மட்டுநகர், கொழும்பு. திருமலை, யாழ்நகர் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டது.

1975 இல் தமிழ் இளைஞர் பேரவையில் இருந்து பிரிந்தவர்களினல் உருவாக்கப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தில் (தற்போதைய தமிழீழ விடுதலை இயக்கம் அல்ல) இணைந்திருந்த பெண்கள் புலோலி வங்கி கொள்ளையில். வங்கிக்குள் இருந்து விபரங்கள் எடுத்துக் கொடுத்தல், தங்கம் கடத்தல் போன்ற வேலைகளை செய்தனர். இவர்களில் புஷ்பராணி, மேரி மங்கையற்கரசி, கல்யாணி பத்மினி, அங்கையற்கண்ணி போன்றோர் குறிப்பிடக்கூடியவர்கள். இவர்களில் சிலர் பொலிசாரிடம் அகப்பட்டு 6 மாதம் வெலிக்கடைச் சிறையில் இருந்தவர்கள். தற்போது இவர்களில் பலர் திருமணம், வெளிநாடு என்று சென்று விட்டனர்.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளில் ஆரம்பத்தில் இருந்தவரும், பின்பு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் இருந்தவருமான ஊர்மிளா குறிப்பிடப்படக்கூடியவர். தற்போது இவர் இறந்து விட்டார். இவரின் இறப்பு இன்றும் மர்மமாகவே உள்ளது.

மேலும் ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' எனும் கோசத்துடன் ''மனிதன்'' பத்திரிகை வெளிவந்தது. இதில் யாழ் பல்கலைக்கழக மாணவிகளும் பங்குபற்றினர்.

தொடர்ந்து காந்தியத்துடன் தொடர்புற்றிருந்த பெண்களினல் பெண்கள் விடுதலை இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. ''பெண்கள் குரல்'' எனும் சஞ்சிகை ஒன்றும் வெளிவந்தது. இதில் அங்கம் வகித்த ஜுலி என்பவர் இன்று தேடப்படுகிறார்.

இதன்பின் விடுதலை இயக்கங்கள் பெண்களை அணிதிரட்டும் வேலையில் ஈடுபட்டிருந்தாலும் 1983 ஆடிக்கலவரத்தின் பின்பே கணிசமான பெண்கள் விடுதலை இயக்கங்களில் சேரத்தொடங்கினர். இவர்களில் பலர் தேச விடுதலையை நோக்கமாகக் கொண்டு விடுதலை இயக்கங்களில் இணைந்தனர் எனினும் சில விடுதலை இயக்கங்கள் இவர்களை பெண் விடுதலையின் பக்கமும் சிந்திக்க வைத்தன.

தொடர்ந்து இன்றைய வெகுஜனப் போராட்டங்களில் பெண்கள் அதிகமாகப் பங்குபற்றுகின்றனர் இவர்களில் எத்தனை பேர் தொடர்ந்து போராட்டங்களில் பங்குபற்றுகின்றனர் என்பது கேள்விக்குறியே எனினும் இவர்கள் வீட்டை விட்டு வெளியேறி. வீதிகளிலே இறங்கியமை வரவேற்கப்பட வேண்டியதே.

மேலும் 1985 மே இல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப்பிரிவான மக்கள் விடுதலைப்படையினால் காரைநகர் கடற்படை முகாம் தாக்கப்பட்டபோது அதில் பங்குபற்றி வீரமரணம் அடைந்த **தோழர் ஷோபா** (மதிவதனி) குறிப்பிடப்படக்கூடியவர். ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் முதன் முதலில் களத்தினில் மடிந்த பெண் என்ற வகையில் இவர் வரலாற்றில் ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

மேலும் ஈழப் பெண்களின் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கான மறைமுக பங்களிப்புகள், மானசீக ஆதரவுகளும் குறிப்பிடக்கூடியவை. அதாவது எமது சமுதாயத்தில் வீடுகளில் இருக்கும் ஆண்களை விட பெண்களே கூடிய பொறுப்புணர்வு மிக்கவர்களாகவும் அனைத்தையும் கவனிக்க கூடியவராகவும் இருக்கின்றனர். இந்த வகையில் ஈழப்போராளிகளையும் உபசரித்து அவர்களை கவனிக்கக் கூடியவர்களாக இப்பெண்கள் காணப்படுகின்றனர்.

இத்தகைய பங்களிப்புகள் இருப்பினும் கூட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் அத் தேசத்தின் குடிமக்கள் என்ற வகையில் இத்தேசிய எல்லையின் வீச்சால் கவரப்பட்ட பெண்களின் பங்களிப்பாக மட்டுமே இவை கொள்ளத்தக்கவை.

இவை தவிர ஏனைய அம்சங்களை கருத்திற் கொள்ளும் போதும் குடும்பச் சமுதாயச் சிறைகளுக்குள்ளும், அடுப்படிக்குள்ளும் பூட்டப்பட்டுக் கிடந்த பெண்களை அரசியல் அரங்கிற்கு இழுத்து விட்டதன் மூலம் சமூக கட்டுப்பாடுகளில் ஒரு உடைப்பை ஈழ விடுதலைப் போராட்டம் சாதித்தது உண்மையே.

ஆனல் 'பெண்விடுதலை' என்பதோடு ஒப்பிடுகையில் இந்நிலைமைகள் போதுமானவையல்ல.

தொடர்ந்து பெண்விடுதலை என்றால் என்ன? பெண்களுக்கான சித்தாந்தம் எது? பெண்விடுதலையின் நோக்கங்கள் எவை? பெண்களுக்கான ஸ்தாபன வடிவம் எது? பாட்டாளி வர்க்க கட்சியோடு பெண்களின் ஸ்தாபனத்தை ஒன்றிணைப்பது எப்படி? பெண்கள் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சனைகள் என்ன? என்ற சித்தாந்த நடைமுறைப் பிரச்சனைகள் பற்றி சற்று நோக்குவோம்.

பெண்விடுதலை எனும்போது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் எமது சமுதாயத்தினர், சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் காட்டப்படும் வேறுபாடுகளை இல்லாது ஒழித்து ஆண் பெண் சமத்துவம் பேணப்படுதலே ஆகும். இதுபற்றி குறிப்பாக ஆண்கள் மத்தியில் பரவலாக வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றது.

அதாவது பெண்களுக்கு விடுதலை கிடைத்தால் பெண்களும் வெளியில் திரியத் தொடங்கி விடுவார்கள் இனி அப்பை பிடிப்பது ஆண்கள் தான் என்பது போன்ற கருத்துக்களும். அத்துடன் ஆண்கள் ஆண்விடுதலைக்காக போராட வேண்டி ஏற்படும் என்றும். மேலும் சோசலிசம் அல்லது கம்யூனிசம் உருவாக்குவது என்றால் அங்கே பெண்களும் பொதுவுடைமையா? என்பது போன்ற கருத்துகளும் நிலவுகின்றன. உண்மையில் இதுவரை காலமும் பெண்களை ஆண்கள் தமது சொத்துக்களில் ஒன்றாக கணிப்பிட்டதன் விளைவே இக்கருத்தாகும். அத்துடன் எக்காலத்திலும் பெண்ணை ஆணுக்கு கீழ்ப்படுத்தவோ அல்லது ஆணைப் பெண்ணுக்கு கீழ்ப்படுத்துதலோ இன்றி இருபாலாரிற்கும் இடையில் சமத்துவம பேணப்படுதலே அவசியமாகும்.

மனிதகுல வரலாறை நாம் நோக்கும்போது அங்கு தனியுடைமையின் தோற்றத்திலிருந்து பெண் ஒடுக்கப்படுவது நன்கு புலனாகும். அதாவது பெண் ஒடுக்குமுறைக்கு காரணம் தனியுடைமை என்பது தெளிவாகிறது. எனவே எமது விடுதலைக்கு தனியுடைமை தகர்க்கப்படுவது அவசியம். இந்த வகையில் மாக்ஸிச லெனினிசத்தை வழிகாட்டலாகக் கொண்டு இயங்கும் பாட்டாளிகளினதும் இறுதி நோக்கு பொதுவுடைமையாகையால் பெண் விடுதலைச் சக்திகளின் நேசவர்க்கமாக பாட்டாளிகளை கொள்ளலாம். அதாவது பாட்டாளிகளின் விடுதலையில் தான் பெண்களின் விடுதலையும், பெண்களின் விடுதலையில் தான் பாட்டாளிகளின் விடுதலையும் தங்கி நிற்கிறது.

மேலும் பெண்கள் தனியான ஒரு அமைப்பின் கீழ் அணி திரள்வது முக்கியமாகும். இவ்வமைப்பை தலைமை தாங்கும் சக்திகள் பாட்டாளி வர்க்க சிந்தனை படைத்ததாக இருக்க வேண்டும். மாறாக குட்டி பூர்சுவா சிந்தனை நிறைந்தவர்களால் தலைமை தாங்கப்படுமாயின் இறுதிவரையான எமது பெண் விடுதலை கிடைக்கும் என்பது வெறும் கனவாகும். ஏனெனில் இவ்வர்க்கம் தனியுடைமை தகர்த்து சோசலிசம் அல்லது கம்யூனிசம் உருவாவதை எதிர்க்கும். எனவே இது சில சீர்திருத்தங்களுடன் மட்டுமே நின்றுவிடும். இத்தகைய பல பெண் விடுதலை அமைப்புகள் இன்றும் பல இடங்களில் இருப்பதை நாம் காணலாம்.

இன்றைய ஈழத்தின் நிலையில் பெண்களும் தேச விடுதலையை முன்னிட்டு ஆயுத பாணிகளாக வேண்டியிருக்கும் அதேவேளை அமையும் ஈழத்தை சோசலிசத்தை நோக்கி கொண்டுபோவதற்குமாக விடுதலை இயக்கங்களுடன் தொடர்புறுவது அவசியமாகிறது. எனவே இந்த வகையில் பெண்கள் ஸ்தாபனம் பாட்டாளி வர்க்கக் கட்சியோடு இணைவதும் அவசியமாகிறது. பாட்டாளி வர்க்கக் கட்சியோடு இது இணைந்திருக்கும் போது இதன் தனித்துவம் பேணப்படவேண்டும். அத்துடன் பெண்களின் முடிவெடுக்கும் திறன் வளர்க்கப்படவேண்டும். அவ்வாறு இருந்தால் தான் – அரசியல் ரீதியில் வளர்ந்து முடிவெடுக்கும் திறனுடையவராக - நிர்வாகங்களிலும் பெண்கள் இருக்கக்கூடியதாக இருக்கும். உதாரணமாக இன்றுவரை சோவியத்தின் மத்திய கமிட்டியில் ஒரு பெண்தானும் இடம்பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடக்கூடியது.

மேலும் ஒரு விடயம் என்னவெனில் இன்று சில ஆண்கள் தாம் சோஷலிச ஈழம் அமைப்போம் எனவும் பெண்களுக்கு விடுதலை தருவோம் எனவும் கூறித்திரிகின்றனர். எமக்கு அதாவது பெண்களுக்கு யாரும் விடுதலை தரவேண்டியதில்லை. அப்படி தரும்படி இங்கு யாரும் கேட்கவுமில்லை. எமது விடுதலையை எம்மால் பெறமுடியும்.

இன்று விடுதலை இயக்கங்களில் இணையும் பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அதாவது அவர்கள் தமது வேலை காரணமாக ஆண்களுடன் பேச நேரிடுகிறது. இதை பார்க்கும் எமது சமூகத்தினர் தவறாக நோக்குகின்றனர். அதிலும் கூடுதலாகப் பெண்களே இவ்வாறு நோக்குவது என்பது

தான் மிகவும் வேதனைக்குரிய விடயம். மேலும் இன்று இயக்கங்களில் இருக்கும் ஆண்களே இயக்கங்களில் இருக்கும் பெண்களைப் பற்றி தவருகக் கதைக்கின்றனர். அதிலும் இவர்களில் தமக்கை, தங்கைமார் இயக்கங்களில் சேர்வதைத் தடுக்கின்றனர். சாணுமிடத்தில் சுடுவோம் என்கின்றனர். இதில் வேடிக்கை என்னவென்ருல் இவ்வாறு கூறும் ஆண்களின் நோக்கம் சோஷலிச தமிழீழம் அல்லது சோஷலிச ஈழம் அமைப்பது. மேலும் சிலர் தமது விடுதலை இயக்கங்களில் இருக்கும் பெண்களைப் பற்றி உயர்வாகவும், ஏனைய விடுதலை இயக்கங்களில் இருக்கும், பெண்களைப் பற்றி தாழ்வாகவும் பேசுகின்றனர். இன்னும் சிலர் இயக்கப் பெண்களுக்கெதிராகத் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். இவர்கள் என்ன நினைக்கிருர்கள் என்ருல் இவ்வாறு தாம் செய்வதால் சில விடுதலை இயக்கங்கள் அல்லது பெண்கள் பாதிக்கப்படுவர் என்று, ஆனல் உண்மையில் இத்தகைய செயல் மூலம் மொத்தமாக அனைத்து விடுதலை இயக்கங்களிலும் பெண்கள் இணைவதைத் தடுப்பதோடு ஈழ விடுதலைக்கும் துரோகம் செய்கின்றனர்.

எனவே இது போன்ற சித்தாந்த நடைமுறை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சரியான தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஈழ விடுதலைப் போராட்டத்தினை – பாட்டாளி வர்க்கத் தலைமையில் முன்னெடுத்தல், சோஷலிச ஈழம் அமைத்தல் என்ற கருத்தோட்டங்கள் ஈழப் போராட்ட நடைமுறை வேலைத் திட்டத்தில் புதிய கேள்விகளை எழுப்பியுள்ளன.

வரலாற்றில் இருந்து கற்றுக்கொள்ளுதல், வரலாற்று அனுபவங்களில் இருந்து தவறுகளை திருத்துதல், கோட்பாட்டிலிருந்து நடைமுறைக்கும், நடைமுறையிலிருந்து கோட்பாட்டிற்கும் செல்லுதல் போன்ற சித்தாந்த வகைப்பட்ட போக்குகளும், ஈழ விடுதலைப் போராட்டம் இன்று கொண்டிருக்கும் புரட்சிகர கருக்களும், பெண் விடுதலை தொடர்பாக பெண்கள் மத்தியிலான சித்தாந்தத் தெளிவும் விழிப்புணர்வுமே தேவையை எதிர்காலத்தில் நிஜமாக்கும்.

நன்றி – செந்நணல்

# சிந்தனை

தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த, நிச்சயமற்ற நிகழ் காலத்தில் தெளிவான **சிந்தனை** ஊடாக முறையான அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்து ஸ்திரமான பாதையில் செல்வதே நமது குறிக்கோளாகும். மேலும் உங்கள் கருத்துக்களையும், கட்டுரைகளையும் **சிந்தனை** வரவேற்கின்றது.

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே **சிந்தனை** உருவாகின்றது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.


| | |
|---|---|
| ஆசிரியர் | Editor |
| **சிந்தனை** | SINTHANAI |
| ஒல்கா ஸ்ராஸா, 49 | Olga str 49, |
| 7 ஸ்ருட்காட் 1, | 7-Stuttgart 1. |
| மேற்கு ஜேர்மனி. | West Germany. |

# அடிமையோடு வாழும்........

தமிழீழ விடுதலைப் போராட்டம் தேசீய விடுதலைப் போராட்டம், சோசலிசப் போராட்டம், என போராட்டங்களைப் பற்றி சகல விடுதலை இயக்கங்களும் தத்தமது பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளன. இவ் விடுதலை இயக்கங்களிலுள்ள பெண்கள் அணிகளிலிருந்தும் பத்திரிகைகள் வெளி வருகின்றன. அதில் பெண்களைப் பங்கேற்கும்படி கேட்டுள்ளார்கள். இருந்தும் பெருமளவு பெண்கள் அதில் பங்கு கொள்ள முடியவில்லை. காரணம் சமூகத்தில் அவர்களுக்கு முன்னால் மறித்து இருக்கும் தடையாகும். இந்த தடையை நீக்காத வரைக்கும் பெண்கள் அதில் பங்கு கொள்வது கடினமாகும். அத் தடை தான் பெண் ஒடுக்கு முறையாகும். உண்மையில் பெண்களில் பெரும்பான்மையோரும் தாம் சமூகத்தில் ஒடுக்கப்படுகின்றோம் என்பதை அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆணுக்குப் பெண் சரி சமமாக வாழ முடியாத நிலை உலகெங்கும் நிலவி வரும் அதே நேரத்தில் தமிழ்ப் பெண்களுக்கு அரச ஒடுக்குமுறையும் கலாச்சாரம் என்ற வடிவில் பல வகையான சமூக ஒடுக்குமுறைகளும் அவர்களின் மேல் திணிக்கப்படுகின்றது. பொதுவாக கணவனை இழந்த பெண்களோ அல்லது கன்னிப் பெண்களோ வெளியே அதிகம் நடமாட முடியாது. அவர்கள் முழுவியளத்திற்கு (அதாவது நல்ல காரியங்கள் நடக்கும் பொழுதோ அல்லது பிரயாணங்கள் செய்ய வெளிப்படும் போதோ அவர்கள் முன்னுக்கு வந்தால் கெட்ட சகுணம் என்பார்கள்) உதவாதவர்கள் என ஒதுக்கி விடுகிறார்கள். ஒரு பெண்ணின் கணவன் இறந்தால் கணவனோடு சேர்த்து கூறைச் சேலையை எரிக்க வேண்டும்

தாலியை கழற்ற வேண்டும் என்பார்கள். கணவனோடு சேர்த்து தனது வாழ்க்கையையும் சாகடிக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். பொட்டு, பூ என்பன வைக்கக் கூடாது, வெள்ளைச் சேலை கட்ட வேண்டும், அவள் இன்னொரு வாழ்க்கை வாழக்கூடிய மன உணர்வைப் பெறக்கூடாது என்ற நோக்கத்துடன் தான் இம் முறைகளைக் கொண்டு வந்தார்கள். ஆதி காலத்தில் கணவனோடு சேர்ந்து பெண்ணும் உடன்கட்டை ஏறுவாள். ஆனால் இப்பொழுது கணவனை இழந்த ஒவ்வொரு பெண்ணும் அவளுடைய விருப்பு வெறுப்புக்கள் மறுக்கப்பட்டு உடன்கட்டை ஏறுவதை விட கொடிய ஆயுட் காலச் சிறைத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் மனைவியை இழந்த எந்த ஆணுக்கும் வெளியுலகில் நடமாடவும், வேறு மணம் செய்யவும் பூரணமான சுதந்திரம் உள்ளது. கணவனை இழந்த ஒரு பெண் தனது மகளின், மகனின் திருமணங்களில் கூட சம்பிரதாயச் சடங்குகள் செய்யக் கூடாது. ஆண் பிள்ளைகளைப் பெற்ற தாயைத் தான் பல சடங்குகளைச் செய்ய அனுமதிப்பார்கள். பெண் பிள்ளைகளைப் பெற்ற தாயை பல பேர்களின் முன்னிலையில் மனரீதியாக பாதிக்கும்படி செய்து விடுகிறார்கள். இதனால் ஒரு தாய் பெண் பிள்ளையைப் பெற்றவுடன் சோர்வும் கவலையும் அடைகிறாள். வெளி இடங்களிலும், பிரயாணங்கள் செய்யும் போதும் பெண்கள் அதிலும் குறிப்பாக கன்னிப்பெண்கள் உரத்துக் கதைக்கவோ, சிரிக்கவோ அன்றி வேறு ஆண்களோடு பேசவோ சுதந்திரம் கிடையாது. அதே வயதுடைய எந்தவொரு இளைஞனும் மேற்கூறியவைகளைச் செய்வதற்கு முழுச் சுதந்திரமும் உண்டு. திருமணம், திவசம் போன்ற வைபவங்களில் ஆண்கள் தான் முதலில் சாப்பிட வேண்டுமென்று ஆண்களை முதல் பந்தியிலும் பெண்களைக் கடைசிப் பந்தியிலும் அமர்த்து-

-வார்கள். இருவரையும் சமபந்தியாக சாப்பிட அனுமதிப்ப-
-தில்லை. மரணச் சடங்குகளிலும் கூட மயானத்திற்கு ஆண்
களைத்தான் போக விடுவார்கள் பெண்களை விடமாட்டார்கள்
பெண்கள் வீட்டுக்குள்ளேயேயிருந்து சமைத்தலும், பிள்ளைகளை
-ப்பராமரித்தல், வீடு வாசலைத் துப்பரவு செய்தல், ஆடு, மாடு
கோழி என்பவைகளைப் பார்த்தல் போன்ற வேலைகளைத் தான்
செய்ய வேண்டுமென ஆண்கள் நினைக்கிறார்கள்.
தாங்கள் மட்டும் தான் வெளியே சென்று வேலை செய்ய-
லாமென்ற தப்பெண்ணம் அவர்களின் மனதில் குடி கொண்
டுள்ளது. அவர்கள் உழைத்த பணத்தை எடுத்து பெண்
சந்தோஷமாக செலவழிக்க இயலாது. அப்படிச் செலவழித்-
தால் கணவன் (உழைத்தவர்) உட்பட கணவனின் தாய், தந்தை
சகோதரர்கள் எல்லோருமாக அவன் உழைத்துப் போட
இவள் ஊதாரித்தனமாக செலவழிக்கிறாள் என்று பொரிந்து
கொட்டுவார்கள். அப்படிப் பொரிந்து கொட்டுபவர்கள் அப்-
-பெண்ணையும் உழைக்க விடலாமே அப்படி விட மாட்டார்
கள். ஏனெனில் பெண் உழைக்கத் தொடங்கினால் அவள்
தன் மூச்சுப்படி நடக்கத் தொடங்கி விடுவாள் எனவும், வீட்
வேலைகளை ஆண் செய்தால் தரக்குறைவாகி விடும் என நினைக்-
-கிறார்கள். கணவனை இழந்த பெண்ணோ, கன்னிப் பெண்ணோ
உழைப்பதற்காக சென்று விட்டால் அவள் மாப்பிள்ளை பிடிப்-
பதற்காக வெளிக்கிட்டு விட்டாள் என அயலவர் உட்பட
எல்லோரும் கிசுகிசுப்பார்கள். எம் சமுதாயத்தில் நெடுங்காலமாக
உள்ள பெரும் பிரச்சனை சீதனம். ஒரு குடும்பத்தில் தனது மக-
-னுக்கு வருகின்ற பெண் சீதனத்தோடு வந்திருந்தால்
மட்டும் அவ் வீட்டிலுள்ளவர்கள், அயலவர்கள் யாவரும் அப்பெண்-
ணை ஒரு மனிதப்பிறவி என்று யோசிக்கின்றார்கள். அல்லாவிடில்
கடம் என்று முடிவு செய்து விடுகிறார்கள். திருமணத்தின் போது
ஆணைப் பெற்ற தாய், தகப்பன் என்போர் பன்மடங்கு உயர்ந்து

விடுகிறார்கள். பெண்ணைப் பெற்ற தாய், தகப்பன் அவர்களுக்குப் வெற்றிலை, பாக்கு, காளாஞ்சி வைத்து வரவேற்க வேண்டும். அதுவுமல்லாமல் அவர்கள் முன்னால் மிகப் பணிவுடன் கதைக்க வேண்டும். ஏதாவது ஏட மாட மாகமாகக் கதைத்தால் ஆணின் தாய், தந்தையர் சொல்லாமல் கொள்ளாமல் தங்கள் வீட்டிற்கு நடையை கட்டி விடுவார்கள். நடையைக் கட்டும் போது கூட சும்மாவா போவார்கள்? அயலிலுள்ளவர்களுக்கு பெண் வீட்டைப் பற்றி இல்லாத, பொல்லாத அவதூறுகளைச் சொல்லிக் கொண்டும், எங்கட மாப்பிள்ளைக்கு "இதைவிட எத்தனை பெரிய இடங்களில் சீதேவி மாதிரிப் பெண் எடுக்கலாமே" என முணுமுணுத்துக் கொண்டும் போவார்கள். இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் திருமணம் நிறைவேறினாலும் திருமணத்தன்று நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஒன்றான மாலை மாற்றுதலில் மாப்பிள்ளை இருந்து கொண்டே பெண்ணுக்கு மாலை போட வேண்டுமென்றும் ஆனால் பெண் எழுந்து நின்றே மாப்பிள்ளைக்கு மாலை போட வேண்டுமென்றும் கூறுவார்கள். அதே போல் மோதிரம் எடுத்தலிலும் ஆண் தான் முதல் எடுக்க வேண்டும் என்றும் பெண் எடுத்தால் அபசகுணம் என்பார்கள். பெண் மாப்பிள்ளையின் தாயாரை விழுந்து நமஸ்கரிக்க வேண்டும் நமஸ்கரிக்கத் தவறினால் அடக்கமில்லாத பெண் என்பார்கள். ஆனால் மாப்பிள்ளை பெண்ணின் தாயையோ, தந்தையோ நமஸ்கரிக்கத் தேவையில்லை. ஆண் அப்படியெல்லாம் செய்தால் தரக்குறைவாகிவிடும். ஒரு கணவனின் தாய், தந்தையோ, சகோதரர்களோ, அன்றி உறவினர்களோ வீட்டிற்கு வந்தால் அவர்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் இல்லாதவாறு வரவேற்புகளும், உபசரிப்புகளும் பெண் (அதாவது மனைவி) செய்ய வேண்டும். அதே மனைவியின் தாய், தந்தையோ, சகோதரர்களோ, உறவினர்கள் வந்தால் கணவன் ஏனோ தானோ என்றிருப்பார்.

o

வெளி இடங்களிலும் கூட ஆண் வீட்டாரை மரியா-
-தையாக நடத்த வேண்டும். பெண் வீட்டார் எங்க-
-ளுக்கு கால காலமாக அடிமையென எண்ணுவார்கள்.
பெண்ணைப் போலவே பெண்ணின் பெற்றோரும் சமுதாயத்-
-தில் தரக்குறைவாக கணிக்கப்படுகிறார்கள்.

ஒரு மனைவி தனது கணவனின் பிழையை அல்லது தவறைச்
சுட்டிகாட்டி அதற்கான காரணத்தைக் கேட்கும் போது
தனது தவறை மறைப்பதற்கு அடி, உதை என்பன
பரிசாகக் கிடைக்கும். அதுவுமல்லாமல் சட்டி, பானைகள்
உடையும். போதாக் குறைக்கு " நீ என்னடி சீதன
கொண்டு வந்தனீ அந்த சந்தியிலுள்ள முருகன் மக-
ளுக்கு இவ்வளவு சீதனம் கொடுத்தான். உன்
அப்பா, அம்மா என்ன தந்தவை? கொண்டு வந்த சீ-
-தனத்திற்கு இவ்வளவு நாளும் நீ சாப்பிட்டதிற்கே-
-போதாது. அதுக்குள்ளே உனக்கு கதை வேற!" இவ-
-ற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு பெண் மூச்சு விடா-
-மல் இருந்தால் தான் அவளுக்கு வாழ்க்கை.

மங்கை



# புரட்சிகர மாற்றங்கள் இன்றே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் முதலாவது பெண் மருத்துவர் 1899 ஆம் ஆண்டு தமது மருத்துவப் படிப்பை முடித்து கடமையேற்றார் என அறியும் போது சாதாரண பெண்ணொருத்தி தன் புருவத்தை உயர்த்தவே செய்வார். இலங்கை வரலாற்றில் 1920 களில் "பெண்களுக்கும் வாக்குரிமை வேண்டும்" என்ற கோரிக்கையுடன் "பெண்களுக்கான வாக்குரிமைச்சங்கம்" போராடியது எனக்கேள்விப்படும் போதும் இவர்களது கோரிக்கை 1931 இல் வெற்றியடைந்தது எனக் கேள்விப்படும் போதும் மேலும் சிலர் புருவத்தை உயர்த்தவே செய்வர்.

இதன்த்தொடர்ந்த ஆண்டுகளில் "பெண்கள் அரசியல் சங்கம்" அகில இலங்கைப் பெண்கள் மாநாடு முதலியன பெண்களுக்கான சமஉரிமை கோரிக்கையை முன்வைத்தனர். 1920 களிலிருந்து பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு, தொழிற்சங்கங்களில் இணைந்து போராடல் முதலியவற்றில் கணிசமான பங்கு பெண்கள் இணைந்து போராடியதால் சுயாதீனமான சோஷலிச பெண்கள் அமைப்பான ஐக்கியப்பெண்கள் முன்னணி 1948 இல் தோற்றுவிக்கப்பட்டது.

எமது மூத்த தலைமுறைப் பெண்களின் போராட்ட முன்னெடுப்புகளின் விளைவாகவே இன்றைய இளம்தலைமுறையினர் அரசியல் சமஉரிமை, கல்வி, வேலைவாய்ப்பு, எழுத்தறிவு, நீண்டகால-உயிர்வாழ்வு, சுகாதாரம் முதலியன பல துறைகளில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளார்கள். இலங்கைப் பெண்களின் இந்த-வாழ்த்தகமையானது மற்றைய மூன்றாவது உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது உயர்ந்த நிலையிலேயே காணப்படுகிறது

1880 ஆண்டுகளில் பிரித்தானிய ஏகாதிபத்தின் கலாச்சாரச்சீரழிவுகளுக்கு எதிராக போராடியதும், இதன்பின்னல் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தொழிற்சங்கப்போராட்டம், சமஉரிமைப்போராட்டம் என்பவற்றினூடாக பெண்கள் தமது உரிமைகளைப் படிப்படியாகப் பெற்றுக்கொண்டதும் பெண்கள் பாரிய சக்தியை உள்ளடக்கியவர்கள் என்ற உளவியல் கண்ணோட்டத்தை இலங்கை சமூகத்தவர் மத்தியிலும், குறிப்பாக அரசியல் வட்டாரங்களிலும் ஏற்படுத்தியதன் விளைவாகவே திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா இலங்கையின் பிரதம மந்திரியாகவும், உலகின் முதலாவது பெண் பிரதமராக வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

சுயாதீனமான பெண்கள் இயக்க வரலாற்றைக்கொண்ட இலங்கையில் மெக்ஸிக்கோவில் 1975 இல் ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8, 1983 அன்று சமாதானத்திற்கான கோஷத்தை எழுப்பி ஊர்வலம் செய்த திருமதி விவியன் குணவர்தனவும் அவரது சக தோழிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பொலிஸ் ஸ்டேஷனில் வைத்து தாக்கப்பட்டனர். 1984, 1985 ஆண்டுகளில் சர்வதேச பெண்கள் தினத்தின் ஊர்வலங்கள் பொலிசாரால் குண்டாந்தடியடிப் பிரயோகத்தின் மூலம் கலைக்கப்பட்டது.

சர்வதேச பெண்கள் தினமாகிய மார்ச் 8ம் திகதி உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட பெண்கள் தமது ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய தினமாக ஐ.நா சபையின் அங்கீகாரத்துடன் கொண்டாடி வருகின்றனர். இதே சமயம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சர்வதேச பெண்கள் மாநாடு 1985 ஆம் ஆண்டு கென்யா நாட்டின் தலைநகரான

நைரோபியில் நடைபெற்றது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இந்தப் பெண்கள் உலகில் சமாதானமும், அமைதியும் நிலவாடில் சமூக முன்னேற்றம், வாழ்க்கைத்தர உயர்வு, நோய் பஞ்சம், வீட்டுவசதியின்மை, வேலைவாய்ப்பின்மை முதலியவற்றிற்கு தீர்வு ஏற்படாதென்றும் தென்னாபிரிக்கா, இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகளின் யுத்தப் பேரிரைச்சல் மூன்றாவது உலக நாட்டு மக்களின் அடிப்படை மனித வாழ்வுக்கே பெரிய அச்சுறுத்தல் என்றும் கருத்துப்பரிமாறியுள்ளனர்.

இலங்கைப்பெண்கள் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலான தமது போராட்டத்தின் மூலம் தமது வாழ் நிலைமைகளை விருத்தி செய்து கொண்ட போதிலும் மூட நம்பிக்கைகள், மாறநிலை மனோபாவம் முதலியவற்றில் இருந்து இன்னும் முழுமையாக விடுபடவில்லை. இலங்கையில் பெணகள் சமூகத்தைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்குவது " பிராமண தத்துவமேயாகும்.

15 ம் நூற்றாண்டின் கவிய சேகராயா என்ற இலக்கிய நூலில் ஒரு பிராமணன் தன் மகளுக்கு கூறும் அறிவுரைகளில் பெண்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

ஆண்களுக்கு பணிவிடை செய்வதையே முக்கியமாகக் கொண்டவர்கள் பெண்கள் எனக்கூறப்படும் இந்த அறிவுரைகளில் கற்பு, நாணம், தாழ்மை, வீட்டில் இருத்தல் கணவனையும் பிள்ளைகளையும் பராமரித்தல், கணவனின் நண்பர்களையும் உறவினரையும் கவனித்தல், கணவனின் செலவுகளில் தலையிடாதிருத்தல், என்பனவே நல்ல பெண்ணுக்கு இலக்கணம் எனவும்; சத்தம் போட்டுப் பேசுதல், வாய்விட்டுச் சிரித்தல், தவறான பெண்களுடன் தொடர்பு வைத்தல், ஓடுதல், சும்மா இருத்தல் என்பவற்றில் பெண்கள் ஈடுபடக்கூடாதென்றும் கூறப்படுகின்றது.

பாரம்பரிய இலக்கியங்களில் பெண்கள் அழகாக இருக்க வேண்டியதைப்பற்றியும், நல்லொழுக்கம் உடையவளாக இருக்க வேண்டியதைப்பற்றியும் அழுத்திக் கூறப்பட்டு வந்துள்ளன. அழகைப்பற்றி இந்த இலக்கியங்கள் கூறும்போது "பஞ்சகல்யாணி" என்ற படைப்பை சிருஷ்டிக்கின்றன. இது பெண்களின் 5 வகையான அழகுகள் - மயிர், பற்கள், சதை, தோல், இளமை ஆகியவற்றின் ஆகியவற்றின் அழகுகளைக்குறிக்கிறது. தமிழ் இலக்கியங்கங்கள் பெண்களுக்கான 4 குணங்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றைப்பற்றிப் பற்றி பேசுகின்றது.

இன்றைய காலகட்டத்திலும் கூட மேடையில், கோவில் பிரசங்கங்களில், சினிமா, நாடகங்களில் பெண்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எவ்வாறு உடுத்திக் கொள்ள வேண்டும், எத்தனை குழந்தைகளைப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் ஆண்களே தீர்மானித்து மக்கள் முன் கொண்டு செல்கிறார்கள்.

இன்றைய சமுதாயத்தில் மேலோங்கியுள்ள "பிராமண தத்துவத்தின்" தன்மை முன்னைவிட குறைந்து கொண்டு சென்றாலும் கூட பெண்களில் மேற்கூறிய பண்புகளை சமூகம் எதிர்பார்க்கும் தன்மையும் பெண்களை ஆண்களுக்கு சேவகம் செய்யும் தொழிலுடன் தொடர்புபடுத்திப்பார்க்கும் தன்மையும் மறைந்து போகவில்லை.

இன்று அரசுக்கெதிராகப் போராடிவரும் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கங்களில் ஒன்று தமிழ் ஈழத்தெருக்களில் ஒட்டிய சுவரொட்டியை நாம் மறந்திருக்கமுடியாது "ஆண்களுடன் சைக்கிளில் செல்லக்கூடாது", முழங்காலுக்கு கீழ் தான் உடுப்புக்கள் அணிய வேண்டும்" முதலான அறிவுரைகள் கூறப்பட்டிருக்கின்றன. "தமிழ் ஈழத்தாய்மார்கள் கூடுதலான குழந்தைகளைப்பெற்றுக்கொள்ளக்கூடாது" என்ற அறிவுரையும் இவர்களால் கூறப்பட்டுள்ளது. இதை யிட்டு அன்னையர் முன்னணி "கண்டனம்" தெரிவித்தது தெரிந்ததே.

ஆக முதலாளித்துவ UNP அரசை தோற்கடித்து தமது அரசினைக் கொண்டு வரவிரும்பும் மேற்குறிப்பட்ட சக்திகளின் அரசாட்சியின் கீழ் பெண்கள் மேலும் அடிமைத்தனத்தையே பெறுவார்கள் என்பது தெளிவாகிறது.

சமுதாயத்தில் ஊறுகொண்டுள்ள பெண்கள் சம்பந்தமான பிற்போக்குக் கருத்துக்கள், பெண்ணடிமைத்தனம், ஆண்மேலாதிக்கவாதம் என்பவற்றிற்கெதிராகப் போராடும் பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து மனிதனை மனிதன் சுரண்டும், அடிமைப்படுத்தும், மேல்சாதியோர் கீழ் சாதியோரை அடிமைப்படுத்தும் அமைப்பு முறையை உடைத்தெறியும் புரட்சிக் கட்சியும் இணைந்து போராடுவதன் மூலமே சகல தரப்பு மக்களுக்குமான விடிவினை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

பெண் விடுதலை என்பது ஆட்சி மாற்றத்தின் ஏற்படக்கூடியது எனவும், பெண் விடுதலை பற்றி பேசவோ, அதற்கான செயற்திட்டங்களை வகுத்து செயற்படவோ இப்போது தேவையில்லை எனவும் கூறி இலங்கை அரசுக்கெதிராக இன்று போராடிக் கொண்டிருக்கும் அமைப்புக்கள், நாளை பெண் ஒடுக்குமுறையைக் கொண்டு நடத்தும் அங்கமாகவே செயற்படும் என்பதை இந்த சர்வதேச பெண்கள் தினத்தில் நாம் விளங்கிக் கொள்வோம்.

வாசுகி மயில்வாகனம்.

# நானொரு பெண்

**மார்ஜியே அஹ்மதி ஒஸ்கூய்**

இக் கவிஞர் ஈரானில் 1945-ல் பிறந்தவர்; ஈரானியச சமுதாயத்திலே உள்ள மிக மோசடியான அநீதிகளுக்கும், சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கும் எதிராகப் போரிட்ட பெண் வீரர்; ஆசிரியத் தொழிலில் பணி புரிந்தவர்; மாணவர் இயக்கத்தில் மும்முரமாக இவர் ஈடுபட்டதால் சிறைக் கொட்டடியில் அரசு இவரைப் பூட்டி வைத்தது; "செரிக்-ஃபெடாலிக்காலக்" ['கொரிலாக்களின் படையணி'] யில் செயற் துடிப்புமிக்க உறுப்பினர்; 1973 மே மாதம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் படைகளால் தூக்கப்பட்டு கொல்லப்பட்டார். மக்களின் போராட்டத்திற்குப் பாய்ச்சிய புது இரத்தம் போன்றவை இவரது கவிதைகள். கோடானுகோடி மக்களின் உள்ளத்திலே புரட்சிக்கனலை மூட்டி விட்டன இவரது எளிய கவிதைகள்!

நானொரு தாய்
நானொரு சகோதரி
நானொரு பணிவுள்ள மனைவி
நானொரு பெண்;

நினைவறிந்த நாள் முதல்
பாலைவனச் சுடுமணலில்
மேலும் கீழுமாய் உழைத்துக் களைக்கின்றேன்;

நானொரு பெண்
வடபகுதிக் கிராமப் பகுதியிலிருந்து வந்தவள் நான்.

நெல் விளையும் கழனியிலே
தேயிலைத் தோட்டங்களிலே
கசக்கிப் பிழியப்பட்டு
உழைக்கிறேன்
நினைவறிந்த நாள்முதல் உழைக்கிறேன்
காலை முதல் மாலை வரை களத்து மேடுகளில்

உடலெல்லாம் இறுகிப் பிழிய
நானும் என்னுடன் எலும்பும் தோலுமாய்
ஒரு மாடும்
உழைக்கிறோம்.

நானொரு பெண்
உழைத்துக் கொண்டிருந்த போதே
மலைகளே படுக்கையாக
என் மகவை ஈன்றெடுத்தேன்.

நானொரு பெண்
நானொரு தொழிலாளி
ஆலையின் பிரமாண்டாமான யந்திரங்களை
என் கரங்கள் இயக்குகின்றன.
அவற்றின் சக்கரப் பற்கள்
எனது வலிமையை, எனது சக்தியை
என் கண்ணெதிரேயே
துண்டுத் துண்டாக கிழித்தெறிகின்றன.

நானொரு பெண்
எனது உயிரின் அமுதமான ரத்தம் குடித்துச்
சுரண்டுபவனின் பிண்டம் தடித்துக் கொழுக்கிறது;
எனது ரத்தம் சுண்டுகின்றது
சுந்து வட்டிக்காரனின் மூலதனம் ஊதிப்பருக்கின்றது.

ஏ, கேடுகெட்ட சுரண்டும் வர்க்கங்களே!
உங்களது வெக்கம் கெட்ட அகராதியிலே
பெண்களுக்கு என்ன தகுதி கொடுத்திருக்கிறீர்கள்?

உங்களது காம சூத்திரங்களிலே
பெண்களின் கைகள் மலர்போல் சிவந்தது
உடல் பூப்போல் மென்மையானது
தோல் பட்டுப்போல் மிருதுவானது
தலைமயிர் வாசம் நிறைந்தது.

பதிலடி கொடுக்கிறேன் நான்
பெற்றுக் கொள்ளுங்கள்
நானொரு பெண்
எனது உடற் தோல் வெங்கனலை வீசியடிக்கும்
எனது தலைமயிர் ஆலைப்புகை வீச்சமடிக்கும்
எனது கைகள் வலியெனும் கத்தி கிழித்துக்
காயப்பட்டு சிவந்திருக்கும்.

ஏ, வெக்கங் கெட்டவர்களே,
எனது பசி போலியானதென்று கூறினீர்கள்?
எனது அம்மணம் போலி வேடம் என்று கூறினார்கள்?

கேடுகெட்ட சுரண்டும் வர்க்கங்களே!
உங்களது வெக்கங்கெட்ட அகராதியிலே
பெண்களுக்கு என்ன தகுதி கொடுத்திருக்கிறீர்கள்?

நானொரு பெண்
துன்பங்கள் கொத்திக் காயங்கள் நிரம்பிய
இதயமொன்று எனக்குண்டு
எனது கண்களிலே
தீச் சொரியும் விடுதலை அம்புகளின்
சிவந்த பிம்பங்கள்
சிறிப் பறக்கின்றன!
எனது கரங்கள் பயிற்சி பெற்றுவிட்டன
துயரங்கள் கோடி துரத்தினாலும் அஞ்சமாட்டேன்
ஆண்மையோடு நான் ஏந்துவேன்
துப்பாக்கியை!

நன்றி– சக்தி

# சிந்தனை

## ஆசிரியர் கருத்து



சர்வதேசப் பெண்கள் தினம், மார்ச் 8.
1912 இல் அமெரிக்காவில் லொறன்ஸ் நகரில் தமது உரிமைகளு
க்காக நீண்ட தியாகங்கள் மிக்க போராட்டத்தில் வெற்றியீட்டிய
நெசவுஆலைப் பெண்தொழிலாளர்கள் உலகப்பெண்களின் உரிமைப்
போராட்ட சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து
வைத்தனர். ஊதிய உயர்வுக்காக ஆரம்பிக்கப்பட்ட அவர்களின்
வேலைநிறுத்தப் போராட்டம் சகல பெண்களின் ஆதரவைப் பெற்று
பெண்களின் உரிமைப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.
இந்த மறுமலர்ச்சியின் விளைவாக 1912 இல் ஜேர்மனியில்
ஸ்ருட்காட் நகரில் தோழியர் கிளெரா செற்கின் தலைமையில்
சர்வதேசப் பெண்கள் தின ஊர்வலம் நடைபெற்றது. இதைத்தொட
ர்ந்து 75 வருடங்களாக உலகப் பெண்கள் இதை தங்களின் தின
மாகக் கொண்டாடுகின்றனர். அன்று லோறன்ஸ் நகரில் வறுமையை
ஒழிக்கவும் வாழ்வு மலரவும் ( Bread and Roses )
அவர்கள் செய்த போராட்டம், பெண்ணுரிமைப்போராட்டத்திற்கும்
வர்க்கப் போராட்டத்திற்கும் உள்ள உறவை எமக்கு உணர்த்துகின்
றது.
ஆனால் இன்றும் எமது மண்ணில்.....
பெண்ணுரிமைப் போராளிகள் என்று பேசப்படும் பொழுது தேர்
தலுக்காக மேடை ஏறியவர்களினதும், பாராளுமன்றப் பாதையில்
பவனி வந்தவர்களின் பெயர்களுமே பட்டியல்களில் சேர்க்கப்படு



கின்றன. மழையிலும் வெய்யிலிலும் மாடாக உழைக்கின்ற மலையகப் பெண்களும், ஆலைகளில் தமது உழைப்பை விற்கின்ற பெண் தொழிலாளர்களும் இந்தப் பட்டியலில் இடம் பெறுவதில்லை. மலையகத்தில் வெடித்தெழுந்த எத்தனையோ போராட்டங்களில் மலையகப் பெண்களும் சரிசமனாகவே பங்குகொண்டுள்ளனர். 1980 இல் சிறிலங்கா அரசு தொழிற்சங்கங்களை ஒடுக்கிய பின் கூட அதற்கெதிராக வெற்றிப் போராட்டம் நடத்திய பொலிரெக்ஸ் பெண் தொழிலாளர்கள் இன்று சரித்திரத்தில் இடம் பிடித்து விட்டார்கள், இந்தப் போராட்டக் குணாம்சங்கள் வடக்கிலும் வளர்ந்துதான் இருந்தது.

வேகின்ற வெய்யிலிலும் சுடுகின்ற நெருப்பினிலும் கைகளுக்கு உறைகளின்றி கண்ணாடித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களின் உணர்வுகளும் இயந்திரங்களுடன் இயந்திரமாக நெசவு செய்யும் பெண்களின் பெருமூச்சுக்களும் போராட்டங்களாக வெடித்திருக்கின்றது. தம் வீட்டிலுள்ள ஆண்களின் கட்டுப்பாடுகளையும், தெருவில் ஆண்களின் கேலிகளையும், பொலிஸ் துன்புறுத்தல்களையும் பொருட்படுத்தாது முதலாளித்துவ ஒடுக்கு முறைக்கெதிராக நீண்ட போராட்டம் நடத்திய 'கிகிகாமன்ரஸ்' பெண் தொழிலாளர்கள் இதற்கு ஒரு உதாரணம்.

ஆண்களின் ஏச்சுக்களையும் பேச்சுகளையும் பெற்றுக் கொண்டு தலை குனிந்து இருள் நோண்டும் கூடங்களிலும், கரும்புத்தோட்டங்களிலும்

ஓடாக உழைத்த பெண்களும் ஒடுக்கு முறைக்கு எதிராகவும்

போர்க் கொடி தூக்கியதுண்டு. கரும்பிலே பதாகை செய்து முதலாளிகளிற்கு எதிராக வீதி ஊர்வலங்கள் செய்த அக்கரையான் சக்கரை ஆலைப் பெண் தொழிலாளர்களும் சீனோர் பெண் தொழிலாளர்களும் இன்னுமொரு உதாரணம்.

ஆனால் இன்று பல புத்திஜீவிகள் போடும் பட்டியல்களில் இவர்கள் உள்ளடங்குவதில்லை. பெண்களின் உண்மையான விடுதலையை இப்படியான பெண்களினாலேயே வென்றெடுக்க முடியும் என்பது எமது நம்பிக்கை.

8.3.1987.



கண்ணாடித் தொழிற்சாலையில் கைகளுக்கு உறைகளின்றி கண்ணாடி அள்ளும் பெண்.

SINTHANAI

Estd: 1985. 2 / 87

All comunications shall be
addressed to :
Editor
SINTHANAI
Olga str 49,
7-Stuttgart 1.

555.P